**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 81/2008**

Deposition of **P.W.-3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G.Mahavishnu, Gr. III Bench clerk of this court, on 21.07.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடேசன் | Father's Name | : கணேசன் |
| Village | : | Taluk | : |
| Calling | : உதவி பொறியாளர்<br>தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்,<br>புத்திரகவுண்டன்பாளையம். | Age | : 44 |

துவக்க நேரம் : 12.15 P.M.

இ.ம.எண்.**25/2026** அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி நீதிமன்றத்தில் முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பில் முதல் விசாரணை :

1. வாதி தரப்பு வழக்கறிஞர் மனுவில் கேட்டுக்கொண்ட ஆவணங்களை சாட்சி கொண்டுவராத காரணத்தால் விசாரிக்க முடியாது என்று கூறி சாட்சி விசாரிக்க மறுத்துவிட்டார்.

நீதிமன்ற விசாரணை

1. நான் தற்பொழுது தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தில் புத்திரகவுண்டன்பாளையம் அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு புத்திரகவுண்டபாளையம் சர்வே எண்.6/9-ல் வழங்கப்பட்ட மின் இணைப்பு எண்.2 தொடர்பான ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி மின் இணைப்பானது கடந்த 20.01.1962-ல் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2007-ம் ஆண்டு கணினி மயமாக்கப்பட்ட பிறகு மேற்படி மின் இணைப்பு தொடர்பான அனைத்து தகவல்களும் கணினியில் பதிவு செய்யப்பட்டது. அதன்படி மேற்படி மின் இணைப்பானது தற்பொழுது ஆரிமுத்து த/பெ. பூமாலை என்பவரது பெயரில் பதிவாகியுள்ளது. மேற்படி மின் இணைப்பானது

கடந்த 1962-ல் வழங்கப்பட்டுள்ளதால், அது தொடர்பான பழைய ஆவணங்களை கோரி வாழப்பாடி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி கேட்டபோது வாழப்பாடி செயற்பொறியாளர் அலுவலகத்திலிருந்து அது தொடர்பான ஆவணங்கள் அலுவலக கோப்புகளில் கிடைக்கபெறவில்லையென பதில் அனுப்பப்பட்டுள்ளது. அந்த கடிதத்தையும் மேற்படி மின் இணைப்பு தொடர்பான தற்போதைய மின் நுகர்வோர் Ledger-யும் கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். வாழப்பாடி செயற்பொறியாளர் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட கடிதம் சாட்சி சான்று ஆவணம்-**1** ஆகவும், Consumer Ledger-ஐ சாட்சி சான்று ஆவணம்-**2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

1. மின் இணைப்பு எண்.2-ஆனது எந்த வகைப்பாட்டின்கீழ் வருகிறது என்றால் Tariff No.IV- விவசாயம் என்ற வகைப்பாட்டின்கீழ் வருகிறது. மேற்படி மின் இணைப்பின் உரிமையாளர் ஆரிமுத்து என்றால் எங்களது ஆவணங்களின்படி அவர்தான் உரிமையாளர். உதவி பொறியாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களின்படி மின் இணைப்பு எண்.2-ஆனது ஆரிமுத்து பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

முடிவு நேரம்: 01.16 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.81/2008, Dt.21.07.2026.